சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் 2014–2015 ஆம் ஆண்டுக்கான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் – திருவள்ளூர் மாவட்டம், வடகரை அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் (ITI) தொடங்குதல் – நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (நிலை) எண். 21 | நாள் : 23.02.2015

ஜய, மாசித் திங்கள் 11 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது :

ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க. எண். க2/21423/2014, நாள் 30.10.2014.

********

ஆணை:–

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31.07.2014 அன்று சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்பாக சில அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றில் பின்வரும் அறிவிப்பும் அடங்கும்:–

> 10 ஆம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர்கள் தொழிற்பயிற்சி பெற ஏதுவாக திருவள்ளூர் மாவட்டம், செவ்வாபேட்டை ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் (ITI) ரூ.10.00 கோடி செலவில் துவங்கப்படும்.

மேற்கண்ட அறிவிப்பு தொடர்பாக ஆதி திராவிடர் நல இயக்குநரிடம் விரிவான கருத்துரு கோரப்பட்டது.

2. அதன் அடிப்படையில், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதி திராவிடர் நல இயக்குநர் புதிதாக தொடங்கப்பட உள்ள தொழிற்பயிற்சி நிலையத்திற்கான பாடப்பிரிவுகள், தேசிய தொழிற்பயிற்சி மன்றத்தால் (National Council on Vocational Training) வரையறுக்கப்பட்டவாறு

ஒரு புதிய தொழிற்பயிற்சி நிலையம் துவங்குவதற்கு தேவைப்படும் இடவசதி, உபகரணங்கள், தேவைப்படும் பணியாளர்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையத்திற்கான விடுதி, விடுதிக்குத் தேவைப்படும் இடவசதி, உபகரணங்கள், தேவைப்படும் பணியாளர்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் அதற்கான விடுதி தொடங்குவதன் பொருட்டு எழக்கூடிய தொடரும் மற்றும் தொடராச் செலவினங்கள் குறித்து விரிவான கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

3. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் விடுதி அமைப்பதற்கான போதிய இடவசதி இல்லாத காரணத்தால், திருவள்ளூர் மாவட்டம், வடகரை அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் புதிதாக தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் அதற்கான விடுதி ஆகியவற்றை 2014–2015 ஆம் கல்வியாண்டில் மொத்தம் ரூ.8.78 கோடி (ரூபாய் எட்டு கோடியே எழுபத்தெட்டு இலட்சம் மட்டும்) செலவில் தொடங்க நிருவாக அனுமதி அளித்தும் நடப்பு நிதியாண்டிற்கு தேவைப்படும் தொகையான ரூ.26,02,000/– (ரூபாய் இருபத்தாறு இலட்சத்து இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், திருவள்ளூர் மாவட்டம், வடகரை அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் புதிதாக தொடங்கப்பட உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 34 பணியிடங்களும், விடுதிக்கு 5 பணியிடங்களும் இவ்வாணையின் இணைப்பில் உள்ளவாறு தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 3 மற்றும் 4–ல் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர் மற்றும் இதர செலவினங்கள் கீழ்க்கண்ட புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – II மாநிலத் திட்டம் – KX ஆதி திராவிடர் நல தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் விடுதி துவங்குதல்.

| | தொடராச் செலவினம் |
|---|---|
| | 2014–15 ஆம் ஆண்டிற்குரியது |
| 01 சம்பளங்கள் (த.தொ.கு. 2225 01 277 KX 0110) | ரூ.1,000/– |
| 03 01 அகவிலைப்படி (த.தொ.கு. 2225 01 277 KX 0316) | ரூ.1,000/– |
| 05 அலுவலகச் செலவுகள் – 05 அறைகலன் (த.தொ.கு. 2225 01 277 KX 0558) | ரூ.1,50,000/– |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் (த.தொ.கு. 2225 01 277 KX 1913) | ரூ.24,50,000/– |

6. மேற்படி புதிய கணக்குத் தலைப்புக்கு இயக்குநர், ஆதி திராவிடர் நலத்துறை, சென்னை – 5 அவர்கள் மதிப்பீடு, கணக்கு மற்றும் நேரமைப்பு கட்டுப்பாட்டு அதிகாரியாவார். கணக்குகளில் மேற்படி புதிய கணக்குத் தலைப்பினை தெடங்குமாறு சம்பளக்கணக்கு அலுவலர்/கருவூல கணக்கு அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களில் பணிநியமனம் செய்யப்படும் பணியாளர்கள் பணிநியமனம் செய்யப்படும் நாளிலிருந்து அடிப்படைச் சம்பளம் மற்றும் இதரப் படிகளை விதிமுறைகளின்படி பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

8. திருவள்ளூர் மாவட்டம், வடகரை அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் புதிதாக தொடங்கப்பட உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு, தேசிய தொழிற்பயிற்சி மன்றத்தால் வரையறுக்கப்பட்டவாறு பாடப்பிரிவுகள், தேவைப்படும் இடவசதி, உபகரணங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையத்திற்கான விடுதி, விடுதிக்குத் தேவைப்படும் இடவசதி, உபகரணங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் அதற்கான விடுதி தொடங்குவதன் பொருட்டு எழக்கூடிய தொடரும் மற்றும் தொடராச் செலவினங்கள் குறித்து இவ்வாணையின் இணைப்பில் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

9. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புதுத்துணைப்பணி குறித்த செலவினமாகும். இதற்கு நாளடைவில் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான முன்பணத்தினை அனுமதிக்கும் ஆணைகள் நிதித் (வரவு–செலவு பொது I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான தொகையினை முன்பணமாக பெறுவதற்கு தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில், இவ்வாணையின் படிகளை இணைத்து நிதித் (வரவு–செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினம் மீது சட்டப்பேரவையின் ஒப்புல் பெறும் பொருட்டு 2014–2015 ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்த்திட ஏதுவாக துணை மானிய குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதித் (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. புதிய தொழிற்பயிற்சி நிலையத்தினை தொடங்குவது குறித்து இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி அவர்களுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், புதிய தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்ட உடன் அது குறித்த அறிக்கையினை தவறாமல் அரசுக்கு அனுப்புமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. இவ்வாணை, அலுவல் சார்பற்ற எண்.11151/மை.ம.ஆ.பி/15, நாள் 23.02.2015–ல் நிதித் துறையின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 2569 ( இரண்டாயிரத்து ஐந்நூற்று அறுபத்தொன்பது).

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலன், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலன், சென்னை – 5.

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை – 32.
மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திருவள்ளூர்.
மாவட்ட கருவூல அலுவலர், திருவள்ளூர்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 / 35 (பெயரில்)

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
அரசுச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை – 9.
நிதி (ஆதி (ம) பந / வரவு–செலவு பொது I (ம) II/மை.ம.ஆ.பி) துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 23/2/15

23/2/15

## இணைப்பு – I

(அரசாணை (நிலை) எண். 21. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந 7) துறை, நாள் 23.02.2015)

புதிய தொழிற்பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட உள்ள பாடப்பிரிவுகள் மற்றும் இடங்களின் எண்ணிக்கை

| வ. எண். | பாடப்பிரிவு | கால அளவு | அலகுகளின் எண்ணிக்கை | இடங்களின் எண்ணிக்கை | கூடுதல் இடங்கள் | மொத்த இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | பிட்டர் | 2 ஆண்டுகள் | 1+1 | 16+16 | 5+5 | 42 |
| 2. | வெல்டர் | 1 ஆண்டு | 2 | 24 | 8 | 32 |
| 3. | எலக்ட்ரீசியன் | 2 ஆண்டுகள் | 1+1 | 16+16 | 5+5 | 42 |
| 4. | வயர்மேன் | 2 ஆண்டுகள் | 1+1 | 16+16 | 5+5 | 42 |
| 5. | மோட்டார் வாகன மெக்கானிக் | 2 ஆண்டுகள் | 1+1 | 16+16 | 5+5 | 42 |
| | மொத்தம் | | | 152 | 48 | 200 |

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர் 23/2/15

23/2/15

## இணைப்பு – II

(அரசாணை (நிலை) எண்.21, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந 7) துறை, நாள் 23.02.2015)

புதிய தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க தேவைப்படும் இட வசதி

(சதுர மீட்டரில்)

| விவரம் | பரப்பு | வகுப்பறை மற்றும் வரைபட அறை | மொத்த பரப்பளவு |
|---|---|---|---|
| 5 பாடப்பிரிவுகளுக்கான ஆய்வகம்/ பட்டறை | 500.00 (100X5) | 150.00 (30X5) | 650.00 |
| அறிவுத்திறன் வகுப்பறை | | 60.00 | 60.00 |
| மொழி மற்றும் மென்திறன் ஆய்வகம் | | 60.00 | 60.00 |
| வாகனங்கள் நிறுத்துமிடம் | 156.00 | | 156.00 |
| மொத்தம் | 656.00 | 270.00 | 926.00 |
| நிர்வாகக் கட்டிடம் | | | |
| முதல்வர் அறை | 20.00 | | |
| பணியாளர் அறை | 10.00 | | |
| எழுத்தர் அறை | 28.00 | | |
| எழுதுபொருள்கள் அறை | 10.00 | | |
| ஆவணங்கள் வைக்கும் அறை | 10.00 | | |
| உபகரணங்கள் வைக்கும் அறை | 45.00 | | |
| நூலகம் மற்றும் படிக்கும் அறை | 30.00 | | |
| இதர வசதிகள் (பணியாளர்கள் மற்றும் மாணாக்கர்களுக்கான கழிப்பறை வசதிகள்) | 162.00 | | |
| மொத்தம் | 315.00 | | 315.00 |
| பெருமொத்தம் | 971.00 | 270.00 | 1241.00 |

**<u>புதிய தொழிற்பயிற்சி நிலைய விடுதி தொடங்க தேவைப்படும் இட வசதி</u>**

| விடுதி | பரப்பளவு (சதுர மீட்டரில்) |
|---|---|
| சுற்றுச்சுவர், கழிப்பறை மற்றும் இதர வசதிகளுடன் கூடிய விடுதி அறைகள் | 400.00 |
| உணவகம் (சமையலறை + சாப்பாட்டு அறை + பொருட்கள் வைப்பறை) | 100.00 |
| மொத்தம் | 500.00 |

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

சு. வெங்கடேசன் [signature]
பிரிவு அலுவலர் 23/2/15

## இணைப்பு – III

(அரசாணை (நிலை) எண். 21, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந 7) துறை, நாள் 23.02.2015)

புதிய தொழிற்பயிற்சி நிலையத்தில் தோற்றுவிக்கப்பட உள்ள பணியிடங்கள்

| வ எண் | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் + தர ஊதியம் (ரூபாயில்) | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | முதல்வர் | 15600–39100+5400 | 1 |
| 2. | பயிற்சி அலுவலர் | 9300–34800+4700 | 1 |
| 3. | உதவி பயிற்சி அலுவலர் | 9300–34800+4400 | 5 |
| 4. | இளநிலை பயிற்சி அலுவலர் | 9300–34800+4200 | 5 |
| 5. | இளநிலை பயிற்சி அலுவலர் (கணிதம்) | 9300–34800+4200 | 1 |
| 6. | இளநிலை பயிற்சி அலுவலர்(வரைதல்) | 9300–34800+4200 | 1 |
| 7. | விடுதிக் கண்காணிப்பாளர் (ம) உடற்பயிற்சி அலுவலர் | 9300–34800+4200 | 1 |
| 8. | பட்டறை உதவியாளர் | 5200–20200+1900 | 3 |
| 9. | அலுவலக மேலாளர் | 9300–34800+4800 | 1 |
| 10. | உதவியாளர் | 5200–20200 +2800 | 3 |
| 11. | பண்டகக் காப்பாளர் | 5200–20200+2800 | 1 |
| 12. | கணக்காளர் | 5200–20200+2800 | 1 |
| 13. | இளநிலை உதவியாளர் | 5200–20200+2400 | 2 |
| 14. | அலுவலக உதவியாளர் | 4800–10000+1300 | 2 |
| 15. | மருந்தாளுனர் | 9300–34800+4200 | 1 |
| 16. | மருத்துவ அலுவலர் (பகுதிநேரம்) | 10000 | 1 |
| 17. | காவலர் | 10000 | 2 |
| 18. | துப்புரவுப் பணியாளர் | 8000 | 1 |
| 19. | மொழி மற்றும் மென்திறன் ஆய்வக பயிற்றுனர் | 20000 | 1 |
| | | | 34 |

**புதிய தொழிற்பயிற்சி நிலைய விடுதியில் தோற்றுவிக்கப்பட உள்ள பணியிடங்கள்**

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் + தர ஊதியம் (ரூபாயில்) | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | விடுதி எழுத்தர் (இளநிலை உதவியாளர் நிலையில்) | 5200–20200+2400 | 1 |
| 2. | சமையலர் | 4800–10000+1300 | 1 |
| 3. | சமையல் உதவியாளர் | 4800–10000+1300 | 1 |
| 4. | காவலர் | 10000 | 1 |
| 5. | துப்புரவுப் பணியாளர் | 8000 | 1 |
| | மொத்தப் பணியிடங்கள் | | 5 |

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்

## இணைப்பு – IV

(அரசாணை (நிலை) எண்.21, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந 7) துறை, நாள் 23.02.2015)

### புதிய தொழிற்பயிற்சி நிலையத்திற்கான தொடரா செலவின விவரம்

| வ.எண் | விவரம் | | மொத்த செலவினம் (ரூ.) |
|---|---|---|---|
| 1 | தொழிற்பயிற்சி நிலைய கட்டிடம் (1241 சதுர மீட்டர் பரப்பளவு) | | 3,29,86,000 |
| | | | |
| 2 | கருவிகள் / உபகரணங்கள் (பாடப்பிரிவு வாரியாக) | | |
| | பிட்டர் | 5000000 | |
| | வெல்டர் | 3000000 | |
| | எலக்ட்ரீசியன் | 3000000 | |
| | மோட்டார் வாகன மெக்கானிக் | 7500000 | |
| | வயர்மேன் | 2500000 | 2,10,00,000 |
| | | | |
| 3 | வகுப்பறை மரச்சாமான்கள் | | 15,00,000 |
| 4 | தொழிற்சாலை விசிறி | | 2,00,000 |
| 5 | அறிவுத்திறன் வகுப்பறை உபகரணங்கள் | | 3,00,000 |
| 6 | மொழி மற்றும் மென்திறன் ஆய்வக உபகரணங்கள் | | 30,00,000 |
| மொத்தம் | | | 5,89,86,000 |

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர் 23/2/15

## இணைப்பு – V

(அரசாணை (நிலை) எண்.21, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந 7) துறை, நாள் 23.02.2015)

### புதிய தொழிற்பயிற்சி நிலைய விடுதிக்கான தொடரா செலவின விவரம்

| வ. எண் | விவரம் | செலவினம் (ரூ.) |
|---|---|---|
| 1 | விடுதி கட்டிடம் (500 சதுர மீட்டர் பரப்பளவு) | 1,00,00,000 |
| 2 | விடுதிக்கான மரச்சாமான்கள் | 40,000 |
| 3 | 5 லிட்டர் அரவை இயந்திரம் | 12,500 |
| 4 | எடை இயந்திரம் | 5,000 |
| 5 | சமையல் பாத்திரங்கள் | 20,000 |
| 6 | 22 லிட்டர் குக்கர் (2 x 5000) | 10,000 |
| 7 | வண்ணத் தொலைக்காட்சி பெட்டி | 6,000 |
| 8 | சமையல் எரிவாயு இணைப்பு | 30,000 |
| 9 | போர்வைகள் (ரூ.250 x 100) | 25,000 |
| 10 | பாய் (ரூ.100 x 100) | 10,000 |
| 11 | நூலக புத்தகங்கள் மற்றும் மரபீரோ | 20,000 |
| மொத்தம் | | 1,01,78,500 |

புதிய தொழிற்பயிற்சி நிலைய விடுதிக்கான தொடரும் செலவின விவரம்

(ரூபாயில்)

| வ. எண் | விவரம் | ஒரு மாதத்திற்கான செலவினம் | ஒரு ஆண்டிற்கான செலவினம் |
|---|---|---|---|
| 1 | உணவுக் கட்டணம் (ரூ.875 x 100) | 87,500 | 8,75,000 |
| 2 | சிறப்பு உணவுக் கட்டணம் (ரூ.40 x 100 x 5) | ------ | 20,000 |
| 3 | பல்வகைச் செலவினம் (ரூ.75 x 100) | 7,500 | 75,000 |
| 4 | செய்திதாள்கள் | 270 | 2,700 |
| 5 | வண்டி வாடகை | 500 | 5,000 |
| | | 95,770 | 9,77,700 |

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர் 23/2/15